இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 354 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 18 – சனிக்கிழமை 03 ஆகஸ்டு 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 354 : Thiruvalluvar Year - 2055 - Aadi 18 - Saturday 03 August 2024 - Madurai 12 Pages ₹ 5.00

### முன்னணி நிறுவனங்களில் உயர் கல்வி பயிலச் செல்லும்

# அரசு பள்ளி மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்கும்!

## பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடந்த விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக.3-

**இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள முன்னணி நிறுவனங்களில் உயர்கல்விப் பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.08.2024) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதன்மை உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

தாய்த் தமிழ்நாட்டிற்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய பெயரால் அமைந்திருக்கின்ற இந்த நூலக அரங்கத்தில் தமிழ்நாட்டின் அறிவுச் சொத்துகளாக விளங்கும் மாணவக் கண்மணிகளை பாராட்ட வந்திருப்பதில் மகிழ்ச்சியும், பெருமையும் நான் அடைந்து கொண்டிருக்கிறேன்.

**புரட்சிக் கவிஞர் பாராட்டியிருப்பார்!**

தமிழ்நாட்டு மாணவர்கள் அனைத்திலும் சிறந்தவர்களாக எப்போது உயர்வார்களோ என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏங்கினார். இப்போது அவர் நம்மிடையே இருந்திருந்தால் உங்களை எல்லாம் பார்த்து…

"என்னரும் மாணவச் செல்வங்களே, ஓங்கிடும் கீர்த்தி எய்தி விட்டீர்கள்" என்று பாராட்டி மகிழ்ந்திருப்பார். இப்படிப்பட்ட உயர்வை அடைந்திருக்கின்ற மாணவ மாணவியர் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை நானும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

மாணவர்கள் உயர்ந்தால் அந்தப் பெருமை, ஆசிரியப் பெருமக்களுக்கு உண்டு! குழந்தைகள் உயர்ந்தால், அந்தப் பெருமை பெற்றோருக்கு உண்டு!

எனவே, உங்களுக்கு உறுதுணையாக இருந்தால், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் நான் மனதார வாழ்த்துகிறேன். பள்ளிக்கல்வித் துறையின் முன்னெடுப்பு இல்லாமல் இந்த சாதனையை நாம் அடைந்திருக்க முடியாது.

இந்தத் துறையின் அமைச்சர், நான் பார்த்து வளர்ந்த பிள்ளை தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கும், துறை அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கழக ஆட்சியில் சாரை சாரையாக படிக்கப் போகும் மாணவர்கள்!**

இன்னொரு முக்கியமான விஷயம், இங்கே பேசுகிறபோது தம்பி மகேஷ் சொன்னார். 54 மாற்றுத்திறனாளி மாணவர்கள் முதன்மை உயர் நிறுவனங்களில் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னார். அதற்காக அந்தத் துறையின் அமைச்சர் என்கின்ற முறையில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் செய்திருப்பது உங்களுடைய வேலை இல்லை - சேவை அது! எதிர்கால கல்விச் சொத்துக்களை உருவாக்கி இந்த சமூகத்துக்கும், நாட்டிற்கும் கொடுத்திருக்கிறீர்கள். உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற பொழுது மாணவர்களுடைய அறிவாற்றல், நாளைய தினம் தமிழ்நாட்டுக்கு மட்டுமில்லை, இந்தியாவுக்கு மட்டுமில்லை, உலகுக்கே பயன் தரப்போகிறது!

> **"நான் தொடங்கி வைத்த "மாடல் ஸ்கூல்ஸ்"ல் தொடங்கிய இந்தப் பயணம், இன்றைக்கு தமிழ்நாட்டின் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் விரிவடைந்திருக்கிறது. நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு அனைத்துத் துறைகளுமே மலர்ச்சி அடைந்திருக்கின்றன. அதிலும், கல்வித் துறை மறுமலர்ச்சி அடைந்திருக்கிறது."**

அந்த வகையில், உலகின் அறிவுச் சொத்துக்களான இந்த மாணவர்களை பார்க்கும்போது எனக்கு உள்ளபடி பெருமையாக இருக்கிறது. ஏறத்தாழ, 10 ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய அரசுப் பள்ளிக் குழந்தைகள், இந்தியாவின் முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களுக்கு நாம் ஆட்சிக்கு வந்த இந்த மூன்று ஆண்டுகளில் சாரை சாரையாக படிக்கப் போகிறார்கள்.

2022ஆம் ஆண்டு 75 மாணவர்கள்! 2023ஆம் ஆண்டு 274ஆக ஆனது. இந்த ஆண்டு, அது மேலும் இரண்டு மடங்காகி, 447 மாணவர்கள் இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இன்னமும் பல நிறுவனங்களில் சேர்க்கை நடத்தி முடிக்கவில்லை. அதனால், இந்த எண்ணிக்கை இன்னும் தினமும் ஏறிக்கொண்டே இருக்கிறது. நான் தொடங்கி வைத்த "மாடல் ஸ்கூல்ஸ்"ல் தொடங்கிய இந்தப் பயணம், இன்றைக்கு தமிழ்நாட்டின் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் விரிவடைந்திருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு அனைத்துத் துறைகளுமே மலர்ச்சி அடைந்திருக்கிறது. அதிலும், கல்வித் துறை மறுமலர்ச்சி அடைந்திருக்கிறது.

**கல்வித்துறையின் செயல்பாடுகள்!**

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே நம்பர் ஒன்!

நாம் தொடங்கிய புரட்சிகரமான புதுமைப்பெண் திட்டத்தின் பயனாக, கல்லூரியில் சேருகின்ற மாணவியர் எண்ணிக்கை 34 விழுக்காடு உயர்ந்திருக்கிறது!

ஏராளமானவர்களுக்கு உயர்கல்வி நிறுவனங்களில் இடம் கிடைத்தது. இதற்கெல்லாம் அடித்தளம் அமைத்தது கல்வித் துறையின் செயல்பாடுகள்!

அதில் முக்கியமானது, இந்தக் காலச் சூழலுக்கு ஏற்ப டெக்னாலஜியை யூஸ் செய்து கற்பிக்கும் முறையை நவீனமாக்கியது. எடுத்துக்காட்டிற்கு சொல்ல வேண்டும் என்றால்,

★ ஒவ்வொரு ஸ்கூலிலும் Hitech Labs, மேம்படுத்தப்பட்ட சிலபசையும், மாடல் கொஸ்டின் பேப்பர்களையும், அனிமேஷனில் விளக்குவது, நான் முதல்வன் வெப்சைட்டில் கடந்த 10 ஆண்டு வினாத்தாள்களை வெளியிட்டது, அதையெல்லாம் மணற்கேணி Appலிலும் வெளியிட்டு இருக்கிறது என்று பல்வேறு புதுமைகள் புகுத்தியிருக்கிறோம்!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.08.2024) பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு கல்வி பயிலச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி கௌஷிகா, இமாச்சல பிரதேச மாநிலத்தின் IIT மண்டியில் உயர்கல்வி பயில செல்வதையொட்டி, அம்மாணவிக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் மடிக்கணினியை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திருமதி சோ. மதுமதி, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### குட்கா முறைகேடு தொடர்பான வழக்கில்

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களுக்கு சம்மன்!

## செப்.9ல் ஆஜராக உத்தரவு!

சென்னை, ஆக. 3 -

குட்கா முறைகேடு தொடர்பான வழக்கில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜய பாஸ்கர், பி.வி ரமணா, முன்னாள் டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன், காவல் துறை முன்னாள் ஆணையர் ஜார்ஜ், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட 27 பேர் செப்டம்பர் 9ம் தேதி நேரில் ஆஜராக சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழ்நாட்டில் தடையை மீறி அதிகாரிகளுக்கு லஞ்சம் அளித்து குட்கா பொருள்கள் விற்கப்பட்டதான புகாரில் டெல்லி சிபிஐ காவல் துறை 2017ம் ஆண்டு வழக்குப்பதிவு செய்து, வழக்கை விசாரித்து வருகிறது. இதில் மாதவராவ், சீனிவாசராவ், உமாசங்கர் குப்தா, உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி செந்தில்முருகன், மத்திய கலால்துறை அதிகாரி நவநீத கிருஷ்ண பாண்டியன், சுகாதாரத்துறை அதிகாரி சிவக்குமார் ஆகிய 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்த சிபிஐ, இவர்களுக்கு எதிராக சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர்கள் சி. விஜயபாஸ்கர், பி.வி. ரமணா, சென்னை முன்னாள் போலீஸ் கமிஷனர் உள்ளிட்ட 21 மத்திய, மாநில அரசு உயர் அதிகாரிகளுக்கு எதிராக கூடுதல் குற்றப்பத்திரிகையை சிபிஐ கடந்த மே மாதம் தாக்கல் செய்தது.

இந்த வழக்கு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் இருந்து சென்னையில் உள்ள நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் அண்மையில் மாற்றம் செய்யப்பட்டது.

இதையடுத்து எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் மீதான குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சி.சஞ்சய் பாபா அமர்வு முன் வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு இருந்த 5 பேர் ஆஜராகி இருந்தார்கள். இதையடுத்து வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் சி.விஜய பாஸ்கர், பி.வி.ரமணா, முன்னாள் டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன், முன்னாள் காவல் ஆணையர் ஜார்ஜ், ஒன்றிய, மாநில அதிகாரிகள் என 27 பேரும் செப்டம்பர் 9ம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என்று சம்மன் அனுப்பி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

---

### வயநாடு நிலச்சரிவு

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 323 ஆக உயர்வு!

## தேடும் பணி தொடர்கிறது!

வயநாடு, ஆக. 3-

வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் பலியானோர் எண்ணிக்கை 323 ஆக அதிகரித்துள்ளது. இன்னும் 295 பேரை காணவில்லை என்றும் அவர்களை தேடும் பணி மிகத்தீவிரமாக நடைபெறுகிறது என்றும் மீட்புக்குழு அறிவித்துள்ளது.

வயநாட்டில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட சூரல்மலா பகுதியில் மீட்புப்பணிகளின்போது நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு குடும்பத்தினர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். சூரல்மலாவின் படவெட்டிகுன்னுவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயங்களுடன் அவர்களது வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

குடும்பத்தில், தலா இரண்டு ஆண்களும் பெண்களும் இருப்பதாகவும், அதில் ஒரு பெண்ணின் காலில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் ராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான்கு பேர் உயிருடன் இருக்கும் இந்தச் செய்தி அப்பகுதி மக்களுக்கும், மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் ஆறுதலாக அமைந்துள்ளது.

படவெட்டிக்குன்னு சூரல்மலாவில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நிலச்சரிவில் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட அந்தக் குடும்பத்தினரை மருத்துவ சிகிச்சைக்காக ஹெலிகாப்டர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ராணுவம் ஏற்பாடு செய்து வருகிறது.

இது தொடர்பாக சூரல்மாலா வார்டு உறுப்பினர் நூருதீன் கூறுகையில், "மீட்கப்பட்ட குடும்பம், அப்பகுதியில் தோட்டம் வைத்திருந்த ஜானியின் குடும்பம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் தனது குடும்பத்துடன் வீட்டில் தங்கியிருந்தார். அப்பகுதியில் உள்ள மற்ற குடியிருப்பாளர்கள் அனைவரும் தற்போது முகாமில் உள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உயிர் பிழைத்தோர் எங்கேனும் சிக்கியிருக்கிறார்களா என்பதை ட்ரோன்களில் ரேடார் கருவியைப் பொருத்தி அதன் மூலம் கண்டறிய திட்டமிடப்பட்டுள்ளது.